**<u>கோவை மத்திய சிறைச்சாலை சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர்.</u>**

முன்னிலை : திருமதி.T. நித்யகலா, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.
மற்றும் கிளைச் சிறைச்சாலை வளாகம் சிறப்பு நடுவர், உடுமலைப்பேட்டை.

**<u>2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 01–ம் நாள் சனிக்கிழமை</u>**

**<u>ஆண்டுபட்டிகை வழக்கு எண் : 58/2026</u>**

<u>அரசுக்காக :</u> காவல் உதவி ஆய்வாளர்,
உடுமலைப்பேட்டை காவல் நிலையம் ,
உடுமலைப்பேட்டை,
குற்ற எண் : 404/2025,
ச/பி. 304(2) BNS. ... குற்றமுறையீட்டாளர்

// எதிர்//

1 ஆம் எதிரி தங்கராஜ் (35/2025),
த/பெ. பிச்சமுத்து,
307, கோவில் கடவு, சகாகிரி, காந்தலூர்,
இடுக்கி மாவட்டம், கேரளா. (**இவ்வழக்கில் 1 ஆம் எதிரி தங்கராஜ் என்பவர் CC No.399/2025 வழக்கை தனியாக பிரிக்க வேண்டி மனு தாக்கல் செய்து மேற்படி மனுவானது Crl.M.P. No.240/2026 என்ற எண்ணில் மேற்படி மனுவானது அனுமதிக்கப்பட்டு, CC No.399/2025 என்ற வழக்கு எண்ணாக தொடரப்பட்டு, கடந்த 20.05.2026 ம் தேதியன்று எதிரியானவர் குற்றவாளி என தீர்ப்புரை பகரப்பட்டது.)**

2 ஆம் எதிரி மனோஜ்குமார் (26/2025),
த/பெ. லேட் காளிதாஸ்,
218, கோவில் கடவு, சகாகிரி, காந்தலூர்,
இடுக்கி மாவட்டம், கேரளா. ... எதிரிகள்

இந்த வழக்கு கடந்த 21.04.2026–ம் தேதி உடுமலைப்பேட்டை, நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களால் கோப்புக்கு எடுக்கப்பட்டு, இன்று 01.08.2026–ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, 2ம் எதிரி சிறையிலிருந்து முன்னிலைப்படுத்தப்பட்டும், இலவச சட்ட உதவி வழக்கறிஞர் திருமதி. பா.வித்யா அவர்கள் ஆஜராகியும், அரசுத்தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்களை பரிசீலனை

செய்தும் இது நாள் வரையில் நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

1. வாதி, சாட்சிகள் தங்கமுத்து மற்றும் மகேஸ்வரன் ஆகியோர்களுடன் கடந்த 23.06.2025 ஆம் தேதி ஊருக்கு செல்ல வேண்டி மதியம் சுமார் 01.30 மணிக்கு உடுமலைப்பேட்டை பஸ்நிலையம் சென்று திருமூர்த்தி மலை டவுன் பஸ் நிற்குமிடத்தில் பஸ்க்காக காந்திருந்தபோது மதியம் 2.00 மணிக்கு தங்களது சுயலாபத்திற்காக திருட வேண்டும் என்ற நோக்கத்துடன் எதிரிகள் தங்கராஜ், மனோஜ்குமார் ஆகியோர்கள் சேர்ந்து திட்டமிட்டு, 1ம் எதிரி தங்கராஜ் வாதியிடம் இருந்து உங்க செல்போனைக் குடுங்க பேசிட்டு தரேன் என்று சொல்லி கேட்க, வாதி ரூ.13,000/- மதிப்புள்ள தனது VIVO Y 21 செல்போனை சட்டைப் பாக்கெட்டில் இருந்து எடுத்தபோது 1ம் எதிரி தங்கராஜ் திடீரென்று வாதியின் செல்போனை பிடிங்கிக் திருடிக் கொண்டு 2ம் எதிரியான மனோஜ்குமாரிடம் கொடுத்து தப்பிச் சென்ற எதிரிகள் இருவரையும் வாதி மற்றும் சாட்சிகள் 2, 4 ஆகியோர் சேர்ந்து கையும் களவுமாக பிடித்துள்ளனர். எனவே, மேற்படி குற்றத்திற்காக எதிரிகள் மீது உடுமலைப்பேட்டை காவல் ஆய்வாளர் பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவு 304(2)-ன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டு 2ம் எதிரிக்கு பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா 2023, பிரிவு 230-ன் படி வழங்கப்பட வேண்டிய அனைத்து ஆவணங்களின் நகல்களையும் இலவசமாக வழங்கி 2ம் எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து எதிரியிடம் குற்றம் குறித்து வினவியபோது 2ம் எதிரி குற்றத்தை மறுத்ததால் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இரு தரப்பும் கேட்கப்படுவதற்கு போதிய அவகாசம் அளித்து பின்னர் 2ம் எதிரி மீது பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா 2023, பிரிவு 263-ன்-ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது 2ம் எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்துரைத்ததால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. வழக்கு விசாரணையின்போது அரசுத்தரப்பில் அ.சா.1 அ.சா.3 மற்றும் அ.சா.4 வரையான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2

வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 2ம் எதிரி மனோஜ்குமார் குற்றச்சாட்டை தன்னிச்சையாக ஒப்புக் கொண்டு சிறப்பு ஜெயில் சிறப்பு அதாலத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

4. குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களில் இவ்வழக்கின் எதிரி ஜெயில் சிறப்பு அதாலத்தில் ஆஜரானபோது குற்றத்தை ஒப்புக்கொண்டு மனு தாக்கல் செய்துள்ளதை கருத்திற்கொண்டும், 2ஆம் எதிரி தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொள்வது தன்னிச்சையானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

5. எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலை ஏற்றும், ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில் இருந்தும், 2ஆம் எதிரி மீதான பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவுகள் 304(2)–ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து 2ஆம் எதிரியிடம் தண்டனை பற்றி கேட்கப்பட்டது.

எதிரியின் பதில் **" நான் தெரியாமல் செய்து விட்டேன். மன்னித்து விடுங்கள், குறைந்த பட்ச தண்டனை வழங்குங்கள்"**

6. இறுதியாக, இவ்வழக்கின் 2ம் எதிரியின் வேண்டுகோள் மற்றும் பதிலைக் கருத்திற்கொண்டும் வழக்கின் தன்மை, 2ம் எதிரியின் வயது, குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, இவ்வழக்கு 2ம் எதிரியின் மீது சுமத்தப்பட்ட பாரதிய நியாய சன்ஹிதா 2023, பிரிவுகள் 304(2)–ன் கீழான குற்றத்திற்கு 6 மாதம் சாதாரண சிறை தண்டனையும் மற்றும் அபராதம் ரூ.100/– விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

7. மேலும் 2ஆம் எதிரி இவ்வழக்கு விசாரணையின் போது முன் சிறையில் இருந்த காலமான 24.06.2025 முதல் 13.10.2025 (112 நாட்கள்) மற்றும் 27.07.2026 முதல் 01.08.2026 வரை (6 நாட்கள்) என மொத்தம் 118 நாட்களை தண்டனை காலத்திலிருந்து பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023, பிரிவு 468–ன் கீழ் கழித்துக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

8. மேலும், இவ்வழக்கில் VIVO Y 21 ப்ளு கலந்த வெள்ளை நிற செல்போன்–1 கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் P.R.No.204/2025–ஆக ஒப்படைக்கப்பட்டுள்ளதை

அதன் உரிமையார் திரு.செல்வன் த/பெ.நாகராஜ் என்பவர் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து Crl.M.P. No.500/2025 என்ற எண்ணில் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்குப் பிறகு அவரே வைத்துக்கொள்ளவும், இவ்வழக்கின் பிணைமுறி பத்திரங்கள் ரத்தாகவும் CC No.399/2025 என்ற வழக்கு தீர்ப்பின் போதே உத்தரவிடப்பட்டுள்ளது.

9. இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, 2026ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 01—ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.08.01 18:05:56 +0530

நீதித்துறை நடுவர் எண்.1, உடுமலைப்பேட்டை.
மற்றும் ஜெயில் அதாலத் சிறப்பு நடுவர்,
உடுமலைப்பேட்டை.

**அட்டவணை**

**சாட்சிகள்:**

| அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சியின் பெயர் | சாட்சியின் விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | திரு.செல்வன் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.மகேஷ்வரன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.கிஷோர் | பார்வை மகசர் சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| சான்று ஆவணம் | சான்று ஆவணத்தின் விபரம் | யார் மூலம் நிரூபணம் செய்யப்பட்டது/அத்தாட்சி செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகசர் | அ.சா.3 |

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருள்</u> :**

| சான்று பொருள்கள் | சான்று பொருள்களின் விவரம் | யார் மூலம் நிரூபணம் செய்யப்பட்டது/அத்தாட்சி செய்யப்பட்டது |
|---|---|---|
| அ.சா.பொ.1 | செல்போன் | அ.சா.1 |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u> : இல்லை**

**<u>எதிரி தரப்பு சான்றுப்பொருட்கள்</u> : இல்லை**

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.08.01 18:06:04 +0530

நீதித்துறை நடுவர் எண்.1, உடுமலைப்பேட்டை.

மற்றும் ஜெயில் அதாலத் சிறப்பு நடுவர்,

உடுமலைப்பேட்டை.